



# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 09 புதன்கிழமை 22.05.2024 கதிர் 264

# மதவாத சக்திகள் பரவாமல் தடுக்கப் பாடுபட்ட ஞானசார தேரருக்கு வெசாக் நாளில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டுமாம்!

## மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதம்



இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமைக்காக நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குமாறு கோரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

மல்வத்து மகாநாயக்க திப்பட்டுவாவே தேரர், ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், அஸ்கிரி மகாநாயக்க வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், ஸ்ரீலங்கா அமரபுர மகா நிகாய மகாநாயக்க தேரர், கரகொட உயங்கொட மைத்திரி மூர்த்தி தேரர், ஸ்ரீலங்கா ராமன்ய மகா நிக்காய மகாநாயக்கர் மகுலவே விமல தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் -

2➤



# யாழ். பல்கலைக்கழகத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்

கல்விசாரா ஊழியர்களின் சம்பள அதிகரிப்பைக் கோரி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும்சம்பள உயர்வு கோரி கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும்நிலையில்யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் இன்று முற்பகல்11 மணியளவில்யாழ். பல்கலைக்கழக முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தை அதிகரி, பல்கலைக்கழக ஊழியர்கள் மாற்றான் வீட்டுப் பிள்ளைகளா?, எம்.சி.ஏ. கொடுப்பனவை அதிகரி. போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இம்மாதம் 2ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மழை 26 ஆம் திகதி வரை தொடரும்!



தென்மேற்கு பருவமழை படிப்படியாக நாட்டிற்கு மேல் நிலைபெற்று வருவதால், தற்போதைய மழை மற்றும் காற்றின்நிலை எதிர்வரும்26 ஆம் திகதி வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் பின்னரும் அவ்வப்போது நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்திற்குப் பொறுப்பான வளிமண்டலவியல் நிபுணர் ஸ்ரீமால் ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைபெய்யக்கூடும்எனவும் சப்ரகமுவ மாகாணம், காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடைக்கிடையே மழை பெய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ரம-84)

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும்!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அறிவித்துள்ளார்.

அமைச்சரவை கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றும், அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒரு கருவில் நான்கு குழந்தைகள் பிரசவிப்பு!

## குழந்தைகளனைவரும் ஆரோக்கிய நிலையில்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மருத்துவ வரலாற்றில் ஒரு கருவில் நான்கு குழந்தைகளை ஆரோக்கியமான முறையில் தாய் ஒருவர் பிரசவித்துள்ளார்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த கரிகரன் கிருஸ்ணவேணி என்பவரே இந்தக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

மருத்துவத் துறையின் வரலாற்றில் இயற்கை முறையில் இவ்வாறு கருத்தரிப்பது அரிதான விடயமாகவே காணப்படுவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியநிபுணர் டொக்டர் சரவணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும் சந்திப்பு இன்று காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் க.கலாரஞ்சினி, மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டொக்டர் சரவணன், குழந்தை நல வைத்திய நிபுணர் டொக்டர் ரி.மதன் ஆகியோர் அங்கு தகவல் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்

2➤

# ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு தூதரகம் சென்று ரணில் இரங்கல்



கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்துக்கு இன்று காலை சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்துக்குத் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலி ரீஸா டெல்கோஷ் உள்ளிட்ட பணிக்குழாம் வரவேற்றது.

ஈரான் ஜனாதிபதியின் மறைவு குறித்து ஈரான் தூதுவர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் இரங்கல் குறிப்பைப் பதிவிட்ட பின்னர், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்துக்கு ஈரான் அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனதும், இலங்கை அரசினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

# ஏப்ரல் மாதம் பணவீக்கம் அதிகரிப்பு

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி கடந்த ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் 2.7 சதவீதமாக அதிகரித்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதத்தில் பணவீக்கம் 2.5 சதவீதமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உணவு வகை பணவீக்கம் கடந்த மார்ச் மாதம் 5 சதவீதமாக இருந்த அதேவேளை, அது கடந்த ஏப்ரலில் 3.3 சதவீதமாக குறைந்துள்ளது. மேலும், மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாக இருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் ஏப்ரலில் 2.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக் களத்தினால் நேற்று (21) வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரெம-86)

## மதவாத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"2016 ஆம் ஆண்டு, கூரகல ரஜமகா விகாரை தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமைக்காக கலகொடஅத்தே ஞானசார தேரர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு மார்ச் 28 ஆம் திகதி அவருக்கு நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

ஞானசார தேரர் கடந்த காலங்களில் நாட்டில் சிங்கள பௌத்த தேசியத்திற்காக குரல் எழுப்பி வந்துள்ளதுடன், சமூகத்தில் இடம்பெற்ற சில மதவாத செயற்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரை தெளிவுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் இவர் செயற்பட்டிருந்தார். இலங்கை சமூகத்தில் சில மதவாத சக்திகள் பரவாமல் தடுக்க அரச பாதுகாப்பு தரப்பினருக்கு இவரது ஆதரவு கிடைத்தமையும் இரகசியமல்ல.

கலகொட ஞானசார தேரரின் செயற்பாடுகள் சமூகத்தில் பலராலும் பாராட்டப்பட்டதுடன், நாட்டில் இனங்களுக்கிடையில் பாரிய முரண்பாடுகள் ஏற்படுவதைத் தடுக்கவும் வழிவகுத்தது என்பது இரகசியமல்ல. மேலும், 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கோட்பாட்டைக் கொண்ட ஜனாதிபதி செயலணியின் தலைமை பதவியை வகித்து நாட்டில் பொதுவான சட்ட அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு கலகொட ஞானசார தேரர் உழைத்துள்ளார் என்பது தெளிவான விடயமாகும்.

இவ்வாறான நிலையில், அவை தொடர்பில் ஜனாதிபதி அவர்கள் கவனத்தை செலுத்துவதுடன், வெசாக் புண்ணிய காலத்தை முன்னிட்டும் கலகொட ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டால் அதனை என்றும் அன்புடன் நினைவு கூருவோம்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரெம-83)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டொக்டர் பெ.மைதிலி உட்பட வைத்தியர்கள், தாதியர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகப்பிரசவத்தில் பிறந்த 4 குழந்தைகளும் கொண்டுவரப்பட்டு ஊடகவியலாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஒரு சூலில் நான்கு குழந்தைகள் பிறக்கும் செயற்பாடானது 5 இலட்சத்து 70ஆயிரம் அம்மாக்களில் ஒருவருக்கே இடம்பெறுவதாகவும் அதுவும் செயற்கை முறையிலான கருத்தரிப்பு மூலமே அவ்வாறான விடயமும் சாத்தியமாகும் நிலையில், இயற்கையாகக் கருத்தரித்து சுகப்பிரசவமாக நான்கு குழந்தைகளை இந்தத் தாயாரர் பிரசவித்ததானது மருத்துவத் துறையில் மிகவும் அரிதான விடயம் என டொக்டர் சரவணன் தெரிவித்தார்.

பிறந்த நான்கு குழந்தைகளும் மிக ஆரோக்கியத்துடன் உள்ளதாக டொக்டர் க.கலாரஞ்சினி உறுதிப்படுத்தினார்.

தமது பிரசவத்திற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது தமக்கு சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் நான்கு பிள்ளைகளையும் பிரசவித்த தாயார் இதன்போது நன்றி தெரிவித்தார்.

# கல்கிசை கடற்கரையில் அரிய வகை மீன் கரையொதுங்கியது



கொழும்பு கல்கிசை கடற்கரை பகுதியில் 'ஹீல்ஸ்' எனப்படும் அரிய வகை மீன் ஒன்று கடந்த 20 ஆம் திகதி இறந்து கரையொதுங்கியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொலைதூர கடல் பகுதியில் அரிதாகவே காணப்படும் இந்த வகை உயிரினத்திற்கு 'கல்குலாஸ்' என்ற பெயரும் பயன்படுத்தப்படுவதாக மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விலங்கு இனம் பெரும்பாலும் ஆழ்கடலில் உள்ள பாறைகளுக்கு மத்தியிலேயே வாழ்வதுடன் அவை கரைக்கு வருவதில்லை எனவும் தெரிவித்துள்ள மீனவர்கள், மற்ற மீன்களின் உடல் நிறத்திலிருந்து மாறுபட்ட புள்ளிகளையுடைய தோலைக் கொண்ட இந்த மீன்கள் உணவாக உட்கொள்ளப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த மீனானது ஆழ்கடலில் உள்ள பாறைகளை சுற்றிவர மீனவர்களால் விரிக்கப்பட்ட வலையில் சிக்கியிருக்கலாம் அல்லது இந்த மீன் ஆழ்கடலின் நீரோட்டத்துடன் கரைக்கு மிதந்து வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. (ரெம-85)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கதிர்காமத்தில் ஆடிவேல் விழாவிற்கான கன்னிக்கால் நடும் சடங்கு வெள்ளியன்று

(வி.ரி.சகாதேவராஜா)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்யச் சடங்கு கன்னிக்கால் நடும் நிகழ்வு நாளை மறுதினம் (24) வெள்ளிக்கிழமை அதிகாலை நடைபெறவிருக்கிறது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

முகூர்த்தத்தில் பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள் மாணிக்க ஆற்றில் குளிப்பாட்டப்பட்டு, நாளை இரவு வள்ளி அம்பாள் திருக்கோவிலில் வைக்கப்பட்டு, காலையில் சுப முகூர்த்தத்தில் வள்ளி அம்மன் ஆலயத்திலிருந்து குழுவினர் கந்தன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்வார்கள்.

கதிர்காமம் பெரிய ஆலயத்தில் இக்கன்னிக்கால் அதிகாலையில் நிலமே முன்னிலையில் பக்தி பூர்வமாக பாரம்பரிய கலாசார மரபு முறைப்படி நடப்படும்.

அதன்படி, வருடாந்த அசல பெரஹெரா - ஆடிவேல் திருவிழா ஜீலை 6 ஆம் திகதி ஆரம்பமாகி, ஜீலை 21ஆம் திகதி பேஷரூர் வலம் மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜீலை 22ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையும்.


இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் ஆலயத் தலைமையகத்தினால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு ராமகிருஷ்ணமிஷனில் வைகாசி விசாகத் தின நிகழ்வு

*கொழும்பு வெள்ளவத்தை ராம கிருஷ்ணமிஷனில் வைகாசி விசாகத் தினநிகழ்வு நாளை 23 ஆம் திகதி மாலை 6.15 அளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.*

*தீபாராதனையை அடுத்து, பஜனை மற்றும் 'புத்தரின் செய்தி' எனும் தலைப்பிலான விசேட உரையும் இடம்பெறவுள்ளன.*

*(04)*



RAMAKRISHNA MISSION
40, Ramakrishna Road, Colombo 6
Phone – 011 2588253, Email: rkmcey@gmail.com
Website - https://www.rkmceylon.org

VESAK 2024

Live-Stream YouTube
RKM Colombo Streaming

WILL BE CELEBRATED
at the Ashrama Hall
- On Thursday, 23rd May 2024 -

Evening Arati at Temple - 6.15 pm.

- 6.45 p.m. - Bhajan
- 7.15 p.m. - Special Lecture on

THE MESSAGE OF LORD BUDDHA

All are cordially invited.


Yours in the Lord,
Swami Aksharatmananda
Swami-in-Charge

All my life I have been very fond of Buddha. I have more veneration for that character than any other— that boldness, that fearlessness, and that tremendous love! He was born for the good of men. Others may seek God, others may seek truth for themselves; he did not even care to know truth for himself. He sought truth because people were in misery. How to help them, that was his only concern. Throughout his life he never had a thought for himself.
- Swami Vivekananda






# மிதி வெடி



"யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே" என்பது பழமொழி. அதாவது உருவம் கண்ணிக்குத் தெரிவதற்கு முன்னமே ஒலி கேக்கும் என்பது அதன் அர்த்தம்.

இங்க என்னடா எண்டா. "இந்தா வாறார். அந்தா வாறார் எண்டு சலசலப்பு வந்த பின் தான் யானைக் கட்சிக்காரர் வரப் போறார்.

"எலக்சன்" வருகுதோ இல்லையோ, எங்கட ஆக்கள் படுகிற பாட்டைப்பார்த்தால் தெரியுது கூடிய சீக்கிரம் "எலக்சன்" ஒண்டு வரப்போகுது போலத் தான் கிடக்குது!

அந்தக் காலத்தில "ஆமி"க்காரத் தளபதி ஆளுநரா இருந்த நேரத்தில ஒரே கட்டடத்துக்கு ஒன்பது தரம் திறப்பு விழா வைச்சது உங்க ளுக்கு ஞாபகம் இருக்குமோ தெரியாது.

ஆளுநர் ஒருக்காத் திறப்பார். அதுக்கொரு ஆலாபாரணம் - ஆரவாரம். அதுக்கெண்டு ஒரு "அலக்கேஷன்".

அமைச்சர் ஒருக்காத் திறப்பார். அதுக்கொரு ஆரம்ப வைபவம். இதெல்லாம் முடிய தேர்தல் வாற நேரமாப் பாத்து ஆட்சி செய்யிறவர் ஒருக்காத் திறப்பார். இப்பிடித் தான் வடக்கில நிர்வாகம் இருந்தது.

கனகாலமா உந்தக் கட்டடத் திறப்பு விழாக் கலாசாரம் இல்லாமல் இருந்தது.

இப்ப "எலக்சன்" வரப்போகுது போல இருக்கு. பால் காச்சிப் படம் வைச்சுத் திறந்த கட்டிடத்தை மீண்டும் நாடா வெட்டித் திறக்க நாட்டுத் தலைவர் நாளைக்கு வாறாராம்.

யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தில படிக்கிற பிள்ளையள் அனுபவ ரீதியா படிக்கிறதுக்கெண்டு தானே "போதனா" வைத்திய சாலை இருக்குது? பீடத்தில படிப்பிக்கிறத "பிரக்டிக்கலா" படிப்பிக்கிற போதனா வைத்தியசாலைக்குப் பக்கத்தில ஒரு கட்டடம் இருந்தால் பிள்ளையளுக்கும் வசதி, படிப்பிக்கிற "டாக்குத்தர்" மாருக்கும் வசதி எண்டதால முந்தி இருந்த பீடாதிபதி ஒருத்தர் படாதபாடு பட்டு மாநகர சபையில இருந்து மத்திய அரசாங்கம் வரை ஓடித் திரிஞ்சு, அந்த இடத்தை எடுத்துக் குடுத்தவர்.

பல்கலைக் கழகத்துக்குச் சொந்தமான அந்தக் காணியில மத்திய கல்வி அமைச்சு அரசாங்கத்தின்ர காசில எட்டு மாடிக் கட்டடம் ஒண்டைக் கட்டி முடிச்சிருக்கு. அது "கம்பஸ்" கட்டடம் தான். ஆனால் இப்ப அதுக்குக் கனபேர் உரிமை கொண்டாடத் தொடங்கியிருக்கினம்.

அரசாங்கக் கட்டடம் எண்டா அது அமைச்சர்ட கட்டடம் எண்டு ஒரு பகுதி புழுகித் திரியுது.

ஆஸ்பத்திரியோட இருக்கிறபடியால அது "ஆஸ்பத்திரி ஐயா" கஸ்டப்பட்டுக் கட்டி முடிச்ச கட்டிடம்!, எண்டு ஒரு பகுதி ஓடித்திரியுது. ஆனால் அந்தக் கட்டிடம் "கம்பஸ்" கட்டிடம் எண்டு அடிச்சுச் சொல்ல ஆள் இல்லாமல் போச்சுது பாருங்கோ..

மருத்துவ பீடத்தில பொறுப்பில இருக்கிறவருக்குப் பொறுப்பில்லப் பாருங்கோ. முதுகெலும்பிருந்தருந்தா அவர் முதலிலேயே எல்லாத்தையும் முறியடிச்சு சொல்லியிருப்பார்!

அவர் அமைச்சருக்கு "அடிவருடி, ஆஸ்பத்திரிக்காரனோட "கோப்பரேட் பார்ட்னர்" எப்பிடி எதிர்த்துச் சொல்லுவார்?

நேரத்துக்கு நேரம் உலகம் சுத்தி வாறதுக்கு "புறொஜெக்ட்"டும் தந்து, போதாக்குறைக்கு "ஸ்பொன்சர்"ம் தாறவையப் பகைக்கேலுமே. ??

ஆர் என்னத்தைச் சொன்னாலும் "ஆமா. ஆமா.." எண்டு தலையாட்டிப் போட்டுத் தன்ர காரியத்தை முடிக்கிறவைக்கு எதைப் பற்றியும் கவலை இல்லையாம்...!

"ஹெல்த்தி சிற்றி" யில - தான் "ஹீரோ" வா இருந்தால் சரி.

சரி விசயத்துக்கு வருவம்.. யாழ்ப்பாணம் "ரவுணு"க்குள்ள ஆஸ்பத்திரிக்கும் "பஸ் ஸ்ராண்ட்"க்கும் நடுவில ஒரு எட்டு மாடிக் கட்டிடம் எழும்பினதெல்லே..?

அது போனவருசம் நவம்பர் 23ஆம் திகதி பால் காய்ச்சி - படம் வைச்சுத் திறக்கப்பட்டுட்டுது!

அதுக்குப் பிறகு, ஜனவரி 5 ஆம் திகதி வடக்குக்கு வந்துட்டுப் போன ஜனாதிபதி, இந்தக் கட்டடத்தைத் திறக்கப் போறாராம் எண்டு ஆராவாரப்பட்டிச்சினம். ஆனால் அவர் பேசாமல் போட்டார். இப்ப நாளைக்குத் திறக்கப் போறார் எண்டு கதை. நடந்தால் பாப்பம்.

திறபட முதலே ஆளாளுக்கு அடிபடுகினம். திறந்தாப் பிறகு "பேக்கறி" ஆருக்கு எண்டதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேணும்!

இதுக்குள்ள இன்னுமொரு விசயம் வெளியால வந்திருக்குது!

"இன நல்லிணக்கம்" அது - இது எண்டு பம்மாத்து விடுற அரசாங்கம் "சமூகமயப்படுத்தப்பட்ட" ஒரு முன்னாள் போராளியை, போர் முடிஞ்சு 15 வருசத்துக்குப் பிறகும் 'தீண்டத்தகாத' ஒராளாக - பயங்கரவாதக் கண்ணாடி கொண்டு "புலி" எண்டு பார்க்குதெண்டா ஆரிட்டைப் போய் அழுறது?

2009 போர் முடிஞ்ச நேரத்தில பிடிச்சுக்கொண்டு போய் புனர்வாழ்வு எண்ட பேரில காட்டாத உலகமெல்லாம் காட்டிப் போட்டு "சமூக மயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளி" எண்டு முத்திரை குத்தி விடுவிச்ச ஒருத்தர், இப்ப 10 வருசத்துக்கு மேலா பத்திரிகையளோட வேலை செய்யுறார்.

ஆளுநர் அலுவலகம் முதல்கொண்டு, ஆளுறவர் அலுவலகம் வரை யாழ்ப்பாணத்துச் செய்திகளுக்கு அந்தத் தம்பியில தான் தங்கியிருக்கிறவை!

இவ்வளவு காலமும் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதிக்கோ. அவற்றை அலுவலக ஊடக்காரருக்கோ தம்பி "முன்னாள் புலி" எண்டு தெரியேல்ல. இந்த முறை ஜனாதிபதி வரேக்க தம்பி நிண்டு செய்தி சேகரிச்சால் பயங்கரவாத அச்சுறுத்தலாம்! அதால "அவரை விட வேண்டாம்!" எண்டு உள்ளூர் பாதுகாப்புத் தரப்பு சொல்லியிருக்குதாம்... எப்பிடி இருக்குது பூராயம் பாத்தியளோ?

இன நல்லணக்கம் - சமூகமயப்படுத்தல் - புனர்வாழ்வளிப்பு எல்லாம் வெறும் "பம்மாத்து"த்தானோ? சர்வதேசத்தை ஏமாற்றும் தந்தரங்கள் தானாக்கும்!

இங்கை நடக்கறதெல்லாம் தலைகீழாக் கிடக்குது!

உதைத் தான் "ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே" எண்டு சொல்லுறது போல.?

நரமுனி

# சீன மொழி பெயர்ப்பாளராக இலங்கையில் பணியாற்றும் நேபாளப் பெண்ணின் பணமும் உடைமைகளும் கொள்ளை!

## சந்தேக நபர் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாகவும் புகார்



குடா வஸ்கடுவ, வெல்லபட எனும் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த நேபாள நாட்டு பெண்ணொருவரின் ஹோட்டல் அறைக்குள் இரவு நேரம் ரகசியமாக புகுந்த நபரொருவர் கத்தியைக் காட்டி அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்று கொலை மிரட்டல் விடுத்து 5, லட்சம் ரூபாவிற்கும் மேல் மதிப்புள்ள பணம் மற்றும் உடைமைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் தொடர்பில் வடக்கு களுத்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையிலுள்ள ஒரு நிறுவனத்தில் சீன மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரியும் நேபாளம், காத்மாண்டுவை சேர்ந்த நிமா டமாங் என்ற பெயரைக் கொண்ட பெண்ணொருவருக்கே இந்நிலைமை ஏற்பட்டது.

அவரது நிறுவனத்தினால் வாகன வாடகைக்கென அவரிடம் கொடுத்து வைக்கப்பட்ட பணமான 1,80,000 ரூபாய், அவரது சொந்த பணமான 3000 ரூபாய், 67500 ரூபாய் மதிப்புள்ள 24 கரட் தங்க மோதிரம், 15000 ரூபா பெறுமதியான வெள்ளி மோதிரம், 100 இந்திய ரூபா, 1 டொலர் மற்றும் 2 கையடக்கத் தொலைபேசிகள் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் அவர் செய்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்த அவர், தனது நண்பியொருவருடன் இந்த ஹோட்டலில் தங்கியிருந்ததாகவும், சம்பவத்தன்று தனது தோழி அறைக்கு வெளியே இருந்ததாகவும், அறையின் படுக்கையில் இருந்தவாறு தான் தனது கைத்தொலைபேசியை பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதன் போது, பாதியளவில் மூடப்பட்டிருந்த கதவு வழியாக ஆண் ஒருவர் உள்ளே நுழைந்து, இடுப்பில் சொருகியிருந்த கத்தியை எடுத்து தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் தன்னை அவர் தொட முயன்றதாகவும், உடனே குளியலறைக்குள் ஓடிச்சென்று கதவை மூடிக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், தனது நண்பியின் குரல் கேட்ட பின்னரே கதவைத் திறந்து வெளியே வந்ததாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

(ரெம-80)



# வெசாக் நிகழ்வுகளை காண கொழும்பு நகரிற்கு வருபவர்கள் நகரை மாசுபடுத்த வேண்டாம்!

## கொழும்பு மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

நாளை (23) முதல் வெசாக் நிகழ்வுகளை காண கொழும்பு நகரிற்கு வருகின்றவர்கள் குப்பைகளால் நகரை மாசுபடுத்த வேண்டாம் என கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு நகரில் பல வெசாக் பந்தல்கள், தானசாலைகள், வெசாக் வலயங்கள் உள்ளன. எனவே, அவற்றை பார்வையிடும் போது, நகரின் தூய்மையை பாதுகாக்க மக்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தான சாலைகளில் உணவு வகைகளை பெறும் போது அவற்றின் கழிவுகளை குப்பைத் தொட்டிகளில் இடுமாறும், கொழும்பு நகரில் பல நிறுவனங்களினால் அமைக்கப்பட்டுள்ள வெசாக் அலங்காரங்களை 27 ஆம் திகதியின் பின்னர் அவசியமாக அகற்றுமாறும் நிறுவன உரிமையாளர்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். வெசாக் நிகழ்வைக் காண கொழும்புக்கு வரும்போது ஒழுக்க சீலமாக நடந்து கொள்ளுமாறும், பௌத்த மதத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொள்ள வேண்டாம் எனவும் அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ரெம-81)

# பொது மன்னிப்புக் காலத்தில் 15,667 இராணுவத்தினர் சட்டபூர்வமாக சேவையிலிருந்து வெளியேறியுள்ளனர்




விடுமுறையின்றி கடமைக்கு சமூகமளிக்காத இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட ஒரு மாத பொது மன்னிப்புக் காலத்தில் 15,667 இராணுவத்தினர் சட்டபூர்வமாக சேவையிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த பொது மன்னிப்பு காலம் 2024 ஏப்ரல் 20 முதல் 2024 மே 20 வரை அறிவிக்கப்பட்டிருந்தது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி மற்றும் அதற்கு முன்னர் விடுமுறையின்றி கடமைக்கு சமூகமளிக்காத இராணுவத்தினருக்கே இவ்வாறு சட்டப்பூர்வமாக சேவையை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி காலப்பகுதியில் விடுமுறையின்றி கடமைக்கு சமூகமளிக்காமல் தற்போது வெளிநாட்டிலிருக்கின்ற 373 இராணுவத்தினருக்கும் இவ்வாறு சட்டரீதியாக இராணுவத்தை விட்டு வெளியேறும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை இராணுவத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

(ரெம-82)

# பாலஸ்தீனம் இல்லாமல் மத்திய கிழக்கில் எப்போதும் அமைதி நிலவப்போவதில்லை!

## நோர்வே பிரதமர் ஜொனஸ் தெரிவிப்பு



நோர்வே, அயர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தை அடுத்தவாரம் அங்கீகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், "பாலஸ்தீன தேசம் என்ற ஒன்று இல்லாமல் மத்திய கிழக்கில் எப்போதும் அமைதி நிலவப்போவதில்லை" என நோர்வேயின் பிரதமர் ஜொனஸ் கர் ஸ்டோர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், "மே 28 ஆம் திகதி நோர்வே, பாலஸ்தீன தேசத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும்!" எனவும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார். இரண்டுதேசம் என்னும் தீர்வே மத்திய கிழக்கில் அமைதிக்கு அவசியமான விடயம் என தெரிவித்துள்ள பல ஐரோப்பிய நாடுகள், பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த நாடுகளின் அறிவிப்பினையடுத்து அந்த நாடுகளுக்கான தமது தூதுவர்களை இஸ்ரேல் உடனடியாக மீள அழைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், பாலஸ்தீன தேசத்தினை அங்கீகரிப்பதற்காக ஸ்பெயின், நோர்வே மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் எடுத்த முடிவுகளை வரவேற்பதாக பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

மேலும் குறித்த நடவடிக்கையின் மூலம், ஸ்பெயின், நோர்வே மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் இரு நாடுகளின் தீர்வு மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீதியை வழங்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் ஒருமுறை நிஷரூபித்துள்ளதாகவும் பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அத்துடன் குறித்த விடயம் இஸ்ரேலிய சட்டவிரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவதற்கும் அனைத்து சர்வதேச முயற்சிகளுக்கும் சாதகமாகப் பங்களிக்கும் எனவும் பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# உளச்சமூகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு சமூக மட்டப் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு





(சர்ஜூன் லாபீர்)

உளச்சமூகப் பிரச்சனைகளை குறைப்பதற்கான உளவியல் உளவளத்துனை செயலமர்வு இன்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் உள்ள பெண்கள் சார்ந்த சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இச்செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமூக மட்டத்தில் இடம்பெறும் உள ரீதியான பிரச்சினைகளுக்கு பெண்களை மையப்படுத்தி அதனை நிவர்த்தி செய்வது சம்மந்தமாகவும்,சமகால உளவள பிரச்சினைகள் சம்மந்தமாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எல்.ஐ கபீர், சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு அம்பாறை மாவட்ட உளவளத்துறை ஆலோசகர் மனூஸ் அபூபக்கரினால் உளவள சமூகசார் பிரச்சினைகள் சம்மந்தமான தெளிவூட்டல் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பண்பாட்டுப் பன்மைத்துவத்தை வலியுறுத்தும் சிறப்பு ஒன்று கூடல்



பண்பாட்டு பன்மைத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு இன்று காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது

ஆரம்பக் கல்விப் பயிற்சி நெறி ஆசிரிய மாணவி ஜெயந்தகுமார் சுலோசனாதேவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் சிறப்புரை ஆற்றினார்.

ஆசிரிய மாணவர்களான சி.யனிஸ்டன், இ.தேவமணி ஆகியோரும் ஆசிரிய மாணவர்கள் சார்பில் உரையாற்றினர்.

கலாசாலை அதிபர் ச.லலீசன் நிறைவுரை ஆற்றினார். விரிவுரையாளர் வேல். நந்தகுமார் சிறப்புரையாளருக்கான அறிமுகவுரையை நிகழ்த்தினார்.

இலங்கையில் பண்பாட்டுப் பன்மைதுவத்தை குறிக்கும் வகையில் ஆரம்பக் கல்வி ஆசிரிய பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட காணொலியும் வெளியிடப்பட்டது.

சிறப்புரையாற்றிய இ.இராஜேஸ்கண்ணன், தான் எழுதிய ஒரு தொகுதி நூல்களை கலாசாலை நூலகத்திற்குக் கையளித்தார்.






## அம்பாறை பௌத்த விகாரையில் மனிதநேய மதியபோசன நிகழ்வு

(எம்.எம்.றம்ஸீன்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தை சேர்ந்த மௌலவி ஒருவரின் வேண்டுகோளில், அம்பாறை பௌத்த தேரர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் பௌத்த பிக்குகளுக்கு பௌத்த விகாரையில் பகல் போசனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மதங்களால், மொழியால் பிரிந்து நின்று ஒருவரையொருவர் சந்தேகக் கண் கொண்டு பாராமல் ஒரே குடையின் கீழ் இலங்கையர் என்ற ஒருமைப்பாட்டின் கீழ் எல்லா இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தால் இந்த நாட்டில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என இதன்போது பிரதம பௌத்த தேரர் தெரிவித்தார்.

# மலையகத்தில் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மத்திய மலை நாட்டின் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாகச் சீரற்ற காலநிலை காரணமாக நீர்த்தேக்கப் பகுதிகளில் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து கொண்டு செல்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்று காலை வரையில் மவுசாகலை நீர்த்தேக்கத்தில் 6 அடி நீர் உயர்ந்துள்ளது. அதேபோல் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 10 அடி உயர்ந்து உள்ளதாகவும் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கென்யோன், லக்சபான, நவலக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து ஓடைகள், ஆறுகள், அருவிகளிலும் வெள்ளப் பெருக்கு



ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடுமையான காற்று வீசுவதால் ஆங்காங்கே மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று இரவு முதல் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.

மழையினாலும் கடுமையான குளிர் நிலவி வருகின்றமையாலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நோட்டன் மஸ்கெலியா பிரதான வீதியில் மண் திட்டுகள் சரிந்து விழுந்துள்ளமையால் அப்பகுதியால் பயணிக்கும்போது மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (தகவல் உதவி - செ.தி.பெருமாள்)

# போராட்டத்தை மலினப்படுத்துகின்ற சக்திகள் ஒதுங்கிக்கொள்ளவேண்டும்

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன்

(நூருல் ஹுதா உமர்)

நாங்கள் சொகுசுத் தேவைகளுக்காகப் போராடவில்லை. எங்களது போராட்டம் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான கோரிக்கைக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

21 நாட்களாக நாங்கள் போராடிவரும் இவ்வாறான சூழலில் சில பல்கலைக்கழகங்களில் உள்ள மனிதாபிமானமற்ற சிலர், எங்களது நியாயமான கோரிக்கைகளை மலினப்படுத்தும் வகையில் சூசகமாக சில வேலைத்திட்டங்களை செய்ய முனைகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுகின்றன.

இவ்வாறானவர்கள் எங்களது போராட்டத்தின் நோக்கத்தை உணர்ந்து அவர்கள் முன்னெடுக்கும் திட்டங்களில் இருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும் - என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.




இங்கு கருத்து தெரிவித்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமில், பல்கலைக்கழக கட்டமைப்பில் பணியாற்றுபவர்கள் என்ற ரீதியில் கல்விசாரா ஊழியர்களாகிய நாங்கள் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்காக குரல் கொடுத்துள்ளோம். இவ்வாறான நிலையில் சிலர் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை நாங்கள் கூட்டாகக் கண்டிக்கின்றோம். இவர்கள் எங்களது கஷ்டங்களை உணர்ந்து எங்களுக்காக குரல்கொடுக்க முன்வரவேண்டும் - என்று கேட்டுக்கொண்டார்.






# மட்டக்களப்பு காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(எம்.எம்.றம்ஸீன்)

காவேரி கலா மன்றத்தில் ஏற்பாட்டில் "மகாசக்தி தொழுநோய் ஒழிப்பு" பணிக்காக செயற்படும் அமைப்புகளைத் தெரிவு செய்து விருது வழங்கும் விழாவிற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அருட்பணி ஏ.எஸ். ஷரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராக மட்டக்களப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பீ.பேனிதரன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றியத்தின் ஹபணிப்பாளர் எம்.ஐ.எம்.ஹாரிஸ்,

அகில இலங்கை ஜம்யதுல்உடலமா காத்தான்குடி கிளையின் சமூக சேவைப் பிரிவின் செயலாளரும் சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றியத்தின்மத நல்லிணக்க குழுவின் இணைப்பாளருமான கே.எல்.எம். அனீஸ் (பலாஹி) மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இரண்டாவது தடவையாகவும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (24) ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு எம்.பி.எல் குழுமத்திற்கான மேலங்கி அறிமுக நிகழ்வு நேற்று (21) மருதமுனை தனியார் விடுதி மண்டபத்தில் நடைபெற்றது. மருதமுனை பிரீமியர் லீக் சுற்றுப்போட்டியின் தவிசாளர் முஸம்மில் நுஸைர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அய்வா கம்பஸ் நிறைவேற்று பணிப்பாளர் டொக்டர் எம்.எச்.எம்.முனாஸிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேலங்கிகளை வழங்கி வைத்தார்.

அணிக்கு 11 பேர் கொண்ட 6 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியாக இம்முறை நடைபெறவுள்ள 2024 மருதமுனை எம்.பி.எல். சுற்றுப் போட்டியில் 8 அணிகள் விளையாடவுள்ளன.

போட்டிகள் அனைத்தும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் சம்பியன் அணிக்கு 50,000 ஷரூபாய் பணப்பரிசும்வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் அணிக்கு 30,000 ஷரூபா பணப்பரிசும் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொள்ளும்அணிக்கு 10,000 ஷரூபாய் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுப்போட்டிக்கான ஏற்பாடுகளை மருதமுனை பிரீமியர் லீக் சுற்றுப் போட்டித் தொடரின் நிர்வாகத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!